சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள்.10.09.2024
OS.No. 4/2022
PW 1 : தங்கராசு (வயது 45 ) த/பெ.ஊருடையான்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

பிரதிவாதியை கடந்த 20 வருடங்களாக எனக்கு தெரியும். பிரதிவாதியிடம் நான் வேலைக்கு சென்றிருந்தேன். என்ன வேலைக்கு சென்றேன் என்றால் விவசாய கூலி வேலைக்கு சென்றேன். பிரதிவாதி கணேசனும் விவசாயி என்றால் சரிதான். எனக்கு முக்கால் ஏக்கர் அதாவது 75 செண்ட் நிலம் திருமங்களத்தில் உள்ளது. அதன் சர்வே எண் எனக்கு தெரியவில்லை. அந்த நிலத்திற்கு பட்டா இன்னும் பெறவில்லை. நான் கூறும் நிலம் என்னுடையது இல்லை என்பதால் தான் இதுவரை பட்டா தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 18.02.2019 ல் கணேசன் பணம் கேட்டார். அன்றைக்கு என்னிடம் பணம் இல்லை. வீடு கட்டுவதற்காக மணமேட்டிலிருந்து பணம் கடனாக வாங்கி வீட்டில் வைத்திருந்தேன். வங்கியிலிருந்து பணம் எதுவும் வாங்கவில்லை. யாரிடம் கடன் வாங்கினேன் என்றால் எனது சித்தப்பா முத்துசாமியிடம் ரூ.1,50,000/- கடன் வாங்கினேன். மீத பணம் 1,50,000/- தை எனது சித்தப்பாவிடம் கொடுத்து வைத்திருந்தேன். அவ்வாறு எனது சித்தப்பாவிடம் கடன் வாங்கியதற்கு ஆதாரம் வைத்துள்ளேன். கடன் வாங்கியதற்கு ஆவணம் எழுதி கொடுத்துள்ளேன். அந்த ஆவணத்தை பார்த்தால் நான் கடன் வாங்கினேனா என்ற விவரம் தெரியவரும் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு ரூ.3 லட்சம் கடன் கொடுக்கும் அளவிற்கு எனக்கு பண வசதி இல்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்தேன். நான் பிரதிவாதியிடம் பணத்தை திருப்பி கொடுக்கும்படி கேட்டும் பணம் கொடுக்கவில்லை என்பதால் போலிசாரிடம் புகார் கொடுத்தேன். போலிசில் பிரதிவாதி என்னை ஏமாற்றி விட்டதாக புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி மீது குற்ற வழக்கு பதிவு செய்தார்களா என்றால் இல்லை. போலிஸ் விசாரணை மட்டுமே நடந்தது. நான் கொடுத்த புகார் பொய்யானது என்பதால் தான் குற்ற வழக்கு பதிவு செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதி கணேசன் தான் புரோ நோட்டை எழுதி கொடுத்தார். அர்ச்சுணன், முருகேசன் ஆகியோர்கள் புரோ நோட்டில் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார்கள். எழுதியவராக கணேசன் புரோ நோட்டில் கையொப்பம் செய்துள்ளாரா என்றால் புரோநோட்டில் ஸ்டாம்பின் மீதும் அதன் கீழும் கையொப்பம் செய்து கொடுத்துள்ளார். கணேசனின் தகப்பனார் பெயர் தெரியாது. புரோ நோட் இங்க் பேனாவில் எழுதப்பட்டுள்ளது. கணேசன் பால்பாய்ன்ட் பேனாவில் கையொப்பம் செய்துள்ளார் என்றால் லிட் பேனாவில் கையொப்பம் செய்துள்ளார். புரோநோட்டை மோசடியாக பின்னிட்டு தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் 3 லட்சம் ரூபாய் கடனாக பிரதிவாதிக்கு கொடுக்கவில்லை என்றும், அதனால் பிரதிவாதி தாவா தொகையை திருப்பி கொடுக்கவேண்டிய அவசியம்

இல்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு நான் 18.02.2019 ல் அறிவிப்பு கொடுத்தேன்.பிரதிவாதியிடம் கேட்டதற்கு பணம் கொடுக்க முடியாது என்று பிரதிவாதி கூறிவிட்டார். நான் கூறுவது போல் போலிஸ் கேஸ் எதுவும் பதிவாகவில்லை என்றும், தவறான நபருக்கு அறிவிப்பு அனுப்பி உள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் தாவா தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

/signed /
தங்கராசு

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார்

சார்பு நீதிபதி
இலால்குடி